P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

October 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தென்மேற்கு வங்கக் கடலில் புதன்கிழமை காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்) உருவானது.

(i) இதையடுத்து, வெள்ளிக்கிழமை (அக்.23) தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் மத்திய வங்கக் கடலில் மற்றொரு புயல் சின்னம் உருவாக வாய்ப்புள்ளது. இது, நாளடைவில் வலுப்பெற்று புயலாக மாற வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டலத் தலைவர் வி.ஆர்.துரை தெரிவித்துள்ளார்.

(ii) புயலுக்கு 'முரசு' எனப் பெயர் சூட்டப்படும்'

- வங்கக் கடலில் புயல் உருவாக வாய்ப்புள்ள நிலையில், அதற்கு இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட தமிழ்ச் சொல்லான 'முரசு' எனப் பெயர் சூட்ட வாய்ப்புள்ளது.
- இந்திய பெருங்கடலின் வடக்குப் பகுதியில், வங்கக் கடல் மற்றும் அரபிக் கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயரிடும் பொறுப்பு இந்திய வானிலை ஆய்வு மையத்துக்கு உள்ளது. வங்கதேசம், இந்தியா, ஈரான், மாலத்தீவுகள், மியான்மர், ஓமன், பாகிஸ்தான், கத்தார், சவூதி அரேபியா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், யேமன் ஆகிய 13 நாடுகள் இணைந்து புயல்களுக்கான பெயர்ப் பட்டியலை உருவாக்குகின்றன. ஒவ்வொரு நாடும் பரிந்துரைத்த பெயர்கள் வரிசைப்படி பயன்படுத்தப்படுகின்றன.
- இந்த நிலையில், தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் மத்திய வங்கக் கடலில் வெள்ளிக்கிழமை (அக். 23) உருவாகும் புயல் சின்னம், புயலாக மாற வாய்ப்புள்ளதாகவும், இது தமிழகத்தை நோக்கி நகரும் எனவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, இந்தப் புயல் சின்னம் புயலாக மாறும் நிலையில், அதற்கு இந்தியா சார்பில் பரிந்துரைக்கப்பட்ட தமிழ்ச் சொல்லான 'முரசு' எனப் பெயரிடப்படும்.
- பண்டைக் காலத்தில் மன்னர்கள் தங்கள் செய்திகள், அறிவிப்புகள் மற்றும் போர்ப் பிரகடனங்களை மக்களுக்குப் பரவலாக அறிவிக்க பயன்படுத்திய பாரம்பரிய தோல் இசைக் கருவியே முரசாகும். தகவல்களைப் பரப்பும் கருவியாக இருந்ததாலும், இயற்கை இடர்ப்பாடுகள் மற்றும் அவசர காலங்களில் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கவும் 'முரசு'

பயன்படுத்தப்பட்டது. செங்கோல், கொடி போன்றவற்றுடன் மன்னரின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக முரசும் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

2. பாதுகாப்புத் துறையில் ஒருங்கிணைந்து செயல்படவும், தற்காப்புத் திறன்களை வலுப்படுத்தவும் துருக்கி, கத்தார், இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் பாகிஸ்தான் புதிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.

(i) கத்தார் தலைநகர் தோஹாவில் கையொப்பமான 'பத்ர் புரிந்துணர்வு ஒப்பந்தம்' எனும் பெயரிலான இந்த ஒப்பந்தம் குறித்து துருக்கி பாதுகாப்பு அமைச்சகம் அதிகாரபூர்வ செய்திக்குறிப்பை வெளியிட்டுள்ளது.

(ii) அதன்படி, இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம், பொருளாதார ரீதியாகவும் ராணுவ ரீதியாகவும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக, ராணுவத் தளவாடங்களின் கூட்டு உற்பத்தி, ஆயுதப் படைகளின் செயல்திறனை மேம்படுத்துதல், தொழில்நுட்ப ராணுவப் பயிற்சி, ஆராய்ச்சி-மேம்பாட்டுத் திட்டங்களில் ஒருங்கிணைந்து செயல்படுதல் ஆகியவற்றுக்கு இந்த உடன்படிக்கை வழிவகுக்கும்.

(iii) ஒவ்வொரு நாட்டின் தனித்துவமான ராணுவ உற்பத்தித் திறன்களை ஒருங்கிணைப்பதன் மூலம், தொழில்சார் பாதுகாப்பு உற்பத்தியை சர்வதேச தரத்துக்கு உயர்த்தவும், நட்பு நாடுகளின் பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றவும் இந்த நடவடிக்கை பெரிதும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) 'நேட்டோ' அமைப்பில் 2-ஆவது பெரிய ராணுவத்தைக் கொண்டுள்ள துருக்கி, வளைகுடா நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. மேலும், துருக்கி, சவூதி அரேபியா, பாகிஸ்தான் இடையே ஏற்கெனவே 'மெக்கா கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம்' செயல்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

3. பிரான்ஸில் நிலவும் வன்முறைப் போராட்ட சூழலை சில வெளிநாட்டுத் தலைவர்கள் தங்களின் சொந்த அரசியல் லாபத்துக்காகப் பயன்படுத்திக் கொள்வதாக அந்நாட்டு அதிபர் இமானுவல் மேக்ரான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(i) பிரான்ஸில் விலைவாசி உயர்வு, பள்ளிகளின் மோசமான உள்கட்டமைப்பைக் கண்டித்து வெடித்துள்ள போராட்டங்களைச் சுட்டிக்காட்டிப் பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், இக்கலவரங்களுக்கு முஸ்லிம் குடியேறிகளே காரணம் என்று எந்தவித ஆதாரமுமின்றி விமர்சித்ததுடன், எல்லைகளை உடனடியாக மூடுமாறும்

வலியுறுத்தியிருந்தார்.

(ii) ஐரோப்பா முழுவதும் பரவும் போராட்டங்கள்

- பிரான்ஸை தொடர்ந்து, ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் விலைவாசி உயர்வு மற்றும் எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன.
- கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில், கல்வியில் கூடுதல் அரசு முதலீடு மற்றும் மாணவர்களுக்கான மலிவு விலை தங்குமிடங்களை வலியுறுத்தி ஆயிரக்கணக்கான மாணவர்களும், ஆசிரியர்களும் பேரணியில் ஈடுபட்டனர். அல்பேனியா தலைநகர் டிரானாவில், கல்விக் கட்டணத்தைக் குறைக்கக் கோரியும், பிரதமர் எடி ராமா பதவி விலக வலியுறுத்தியும் 8-ஆவது நாளாக நடைபெறும் போராட்டம் வன்முறையாக மாறியது.
- இதேபோல், டீசல் விலையேற்றத்தைக் கண்டித்து, இத்தாலியின் தென்பகுதிகளில் லாரி ஓட்டுநர்கள் நடத்தி வரும் தொடர் வேலை நிறுத்தத்தால் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, பல்பொருள் அங்காடிகள் மற்றும் எரி பொருள் நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

4. முதல்முறையாக நடைபெறும் காமன்வெல்த் கபடி சாம்பியன்ஷிப், அகமதாபாதில் வெள்ளிக்கிழமை (அக். 23) தொடங்கி, வரும் 31-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில் 23 அணிகள் பங்கேற்க, 62 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

5. இந்தியா, சீனா இடையே நிலவும் போட்டி மற்றும் ஒத்துழைப்பு குறித்து எழுதப்பட்டுள்ள புத்தகத்தை ஷாங்காயில் உள்ள இந்திய துணைத் தூதரகம் வெளியிட்டது.

(i) சீனாவின் ஷாங்காய் நகரில் இந்திய துணைத் தூதர் பிரதீக் மாத்தூர் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சியில், 'தி டிராகன், தி எலிபென்ட் அன்ட் தி எமர்ஜிங் வேர்ல்ட் ஆர்டர், பிட்வின் காம்படிசன் அன்ட் கோஆபரேஷன்' என்ற தலைப்பிலான புத்தகம் வெளியிடப்பட்டது. இந்தியா அறக்கட்டளை மற்றும் சீனாவின் ஃபுடான் பல்கலைக்கழகம் ஆகியவை கூட்டாக அந்தப் புத்தகத்தை பிரசுரித்துள்ளன.

6. இந்தியாவில் போதைப் பொருளை முற்றிலும் ஒழிக்க, அனைத்து மாநில காவல் துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவுறுத்தினார்.

(i) காவலர் வீரவணக்க நாளையொட்டி தில்லியில் உள்ள தேசிய காவல் நினைவிடத்தில் அமித் ஷா மரியாதை செலுத்தினார். 1959 அக்டோபர் 21-இல் லடாக்கின் ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில், சீனப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய திடீர் தாக்குதலில் உயிரிழந்த 10 காவலர்களின் நினைவாக ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

7. ராணுவத்துக்கு ரூ.770 கோடியில் இலகு ரக மேம்பட்ட ரேடார்களை கொள்முதல் செய்வதற்காக பாரத் எலெக்ட்ரா னிக்ஸ் நிறுவனத்துடன் (பெல்) பாதுகாப்பு அமைச்சகம் கையொப்ப மிட்டுள்ளது.

(i) நாட்டின் வான் பாதுகாப்பு அமைப்புகளை உள்நாட்டுமயமாக்கும் நடவடிக்கையில் குறிப்பிடத்தக்க படிக்கல்லாக இந்த கொள்முதல் அமையும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ராணுவத்துக்கு ரூ.770 கோடி மதிப்பீட்டில் மேம்பட்ட, குறைந்த உயரத்தில் உள்ள இலக்குகளைக் கண்டறியும் ரேடார்களை (எல்எல்எல்ஆர்-1) கொள்முதல் செய்வதற்காக பெல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. தில்லியில் பாதுகாப்புத் துறை செயலர் ராஜேஷ் குமார் சிங் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது.

(iii) இந்த ரேடார் அமைப்பானது, போர் விமானம் அளவிலான இலக்குகள் முதல் சிறிய-நுண்ணிய ட்ரோன்கள் வரை கண்டறிந்து, கண்காணிக்கும் திறன் கொண்டதாகும். இவை, ஆளில்லா வான்வழி அமைப்புகளால் எழும் அச்சுறுத்தல்களை இந்திய ராணுவம் திறம் பட எதிர்கொள்ள உதவும்.

(iv) 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த பாரதம் இலக்கை எட்டுவதற்கு ஏற்ப நாட்டின் பாதுகாப்பு உற்பத்தி கட்டமைப்பை வலுப்படுத்தவும், வான் பாதுகாப்பு அமைப்புகளை உள்நாட்டுமயமாக்கவும், தற்சார்பு மிக்க, உலகளாவிய போட்டித் திறன் கொண்ட பாதுகாப்பு தொழில் துறையை கட்டமைக்கவும் முக்கிய படிக்கற்களில் ஒன்றாக இந்தக் கொள்முதல் அமையும்' என்றார்.

8. நீர்நிலைகளைப் பாதுகாப்போம்

(i) கணக்கெடுப்புத் தரவுகள் மற்றும் தமிழ்நாட்டின் நீர்நிலைகளின் தற்போதைய நிலை

- மத்திய ஜல் சக்தி அமைச்சகம் 2023ஆம் ஆண்டு வெளியிட்ட 2017–18ஆம் ஆண்டிற்கான நீர்நிலைகள் கணக்கெடுப்பு மற்றும் தமிழ்நாடு மாநில நீர்வளத் துறையின் (WRD) தரவுகளின்படி, தமிழ்நாட்டில் முக்கிய ஆறுகள், சிற்றாறுகள், ஓடைகள் மற்றும் கால்வாய்கள் உள்ளிட்ட 1,06,000-க்கும் மேற்பட்ட நீர்நிலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் பாசனத்திற்குப் பயன்படும் 41,100-க்கும் மேற்பட்ட ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளன. அவற்றில் சுமார் 14,000 பெரிய ஏரிகள் நீர்வளத் துறையின் நிர்வாகத்திலும், 27,000-க்கும் மேற்பட்ட சிறிய ஏரிகள், ஊருணிகள் மற்றும் குளங்கள் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்திலும் உள்ளன.
- செயல்பாட்டில் உள்ள மற்றும் இழந்த நீர்நிலைகள்:
    - சுமார் 89,000 நீர்நிலைகள் (83%) தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளன.
    - சுமார் 18,000 நீர்நிலைகள் (17%) வறண்டு போதல், முறையாகத் தூர்வாரப்படாமை, கட்டமைப்புச் சேதங்கள், தொழிற்சாலைக் கழிவுகளால் ஏற்படும் மாசுபாடு மற்றும் ஆக்கிரமிப்புகள் போன்ற காரணங்களால் இழக்கப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.
- இயற்கையான நீர்க்கசிவு, ஆவியாதல் மற்றும் நிலத்திற்குள் நீர் உறிஞ்சப்படுதல் போன்ற இழப்புகளுக்குப் பிறகும் நீர்நிலைகளில் எஞ்சியிருக்கும் நீர், குடிநீர், அன்றாடத் தேவைகள், கால்நடைகள், தொழிற்சாலைகள் மற்றும் விவசாயம் ஆகியவற்றிற்கு இன்றியமையாததாகும்.

(ii) சட்டக் கட்டமைப்பு, சுற்றுச்சூழல் விதிகள் மற்றும் சட்டப் பகுப்பாய்வு

- 2020ஆம் ஆண்டு மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்கள்: பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (PoP), நச்சுத்தன்மை கொண்ட ரசாயனச் சாயங்கள், தெர்மாகோல் மற்றும் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் ஆகியவற்றைக் கொண்டு சிலைகள் தயாரிப்பதைத் தடை செய்கின்றன.
- சிலை கரைப்பு தொடர்பான விதிமுறைகளும் தண்டனைகளும்: சிலைகளைக் கரைப்பதற்கு முன்பு ஆடைகள், பூக்கள், மாலைகள் மற்றும்

அலங்காரப் பொருட்களைத் தனியாகப் பிரித்து, மறுசுழற்சிக்கு அனுப்ப வேண்டும். இயற்கையான நீர்நிலைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, உள்ளாட்சி அமைப்புகள் தற்காலிக செயற்கை நீர்த்தொட்டிகளை அமைக்க வேண்டும். விதிமீறல்களுக்கு ₹1 லட்சம் வரை அபராதம், 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974; தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம், 2007; பாரதிய நியாய சன்ஹிதா, 2023 ஆகியவற்றின் கீழ் சட்டப்பூர்வ நடவடிக்கைகளுக்கான வழிவகைகள் உள்ளன. தேசிய பசுமைத் தீர்ப்பாயமும் (NGT), சென்னை உயர் நீதிமன்றமும் இயற்கையான நீர்நிலைகளில் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் (PoP) சிலைகளைக் கரைப்பதற்குத் தடை விதித்துள்ளன.
- தற்போதுள்ள சட்டங்கள் பெரும்பாலும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களால் ஏற்படும் மாசுபாட்டை மையமாகக் கொண்டுள்ளன. தனிநபர்களின் விதிமீறல்களுக்கும் தண்டனை வழங்குவதற்கான சட்டப்பிரிவுகள் இருந்தாலும், மத நம்பிக்கைகள் சார்ந்த நடைமுறைகளுக்கு எதிராகக் குற்றவியல் தண்டனைகளை அதிகாரிகள் கடுமையாகச் செயல்படுத்தத் தயக்கம் காட்டுகின்றனர்.

(iii) சமூக–மத நம்பிக்கைகளும் தனிநபர்களால் ஏற்படும் மாசுபாடும்

- ஆழமாக வேரூன்றியுள்ள மத நம்பிக்கைகளின் காரணமாக, நோயிலிருந்து குணமடைந்தவர்கள், ஜோதிடப் பரிகாரம் தேடுபவர்கள் அல்லது இறந்த உறவினர்களின் ஆடைகளை அகற்ற விரும்பும் குடும்பத்தினர் ஆகியோர் தாமிரபரணி ஆற்றின் பாபநாசம் பகுதி போன்ற இடங்களில் ஆடைகளை நேரடியாக ஆற்றில் வீசுகின்றனர்.
- இறந்தவர்களின் ஆடைகளை ஆற்றில் விடுவதன் மூலம் அவர்களின் ஆன்மா அமைதியடையும் என்பது ஒரு நம்பிக்கையாக உள்ளது. ஜோதிடர்களும் சடங்குகளை நடத்துபவர்களும் பக்தர்களிடம் ஆடைகளை ஆற்றில் மூழ்கடித்துவிட்டு, திரும்பிப் பார்க்காமல் செல்லுமாறு அடிக்கடி அறிவுறுத்துகின்றனர்.
- சட்டங்களின் மூலமாகவும் தண்டனை அச்சுறுத்தல்களின் மூலமாகவும் மட்டுமே மத நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட இத்தகைய நடைமுறைகளை முற்றிலும் ஒழிக்க முடியாது. நீண்டகாலத் தீர்வுகளுக்கு மாற்று வசதிகளை உருவாக்குதல், விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை

மேற்கொள்ளுதல் மற்றும் ஆன்மிகத் தலைவர்கள், ஜோதிடர்கள், ஆர்ட் ஆஃப் லிவிங் பயிற்றுநர்கள் மற்றும் மக்கள் நம்பும் ஆன்மிக வழிகாட்டிகள் ஆகியோருடன் இணைந்து செயல்படுதல் அவசியமாகும்.

(iv) அடிமட்ட அளவிலான முன்னுதாரணங்களும் சமூக நீர்நிலைப் பாதுகாப்பு மாதிரிகளும்

- சுற்றுச்சூழல் அறக்கட்டளை (Environmental Foundation of India – EFI), தாமிரபரணி பாதுகாப்பு இயக்கம், திருநெல்வேலி சமூகப் பணிச் சங்கம் மற்றும் உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்ற குடிமைச் சமூகக் குழுக்கள் பாபநாசம் கோயில் மற்றும் ஆற்றங்கரைப் பகுதிகளில் தொடர்ந்து தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. ஓய்வுபெற்ற அரசு அதிகாரிகளும் உள்ளூர் பெரியவர்களும் தங்களது சொந்தச் செலவில் தொழிலாளர்களை அமர்த்தி, ஆற்றின் நீரோட்டத்தைத் தடைசெய்யும் டன் கணக்கிலான ஆடைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றி வருகின்றனர்.
- மகளிர் சுயஉதவிக் குழுக்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் ஆற்றங்கரைகளில் வீசப்படும் ஆடைகளைச் சேகரித்து, அவற்றைச் சுத்தம் செய்து, மிதியடிகள், பாய்கள் மற்றும் கைவினைப் பொருட்களாக மறுபயன்பாட்டிற்குக் கொண்டுவருகின்றன.
- சடங்குகளுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆடைகளைச் சேகரிப்பதற்கெனத் தனிப் பெட்டிகளும், பூக்கள் மற்றும் மாலைகள் போன்ற மக்கும் பொருட்களுக்கெனத் தனிக் கழிவுத் தொட்டிகளும் பாபநாசம் கோயில் மற்றும் ஆற்றங்கரைப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய உள்ளூர் முயற்சிகளைத் தமிழ்நாட்டின் அனைத்து நீர்நிலைகளுக்கும் விரிவுபடுத்த ஊக்கமளிக்க வேண்டும்.

(v) முன்மொழியப்படும் செயல்திட்டமும் மூலோபாயப் பரிந்துரைகளும்

- அனைத்து நீர்நிலைகளிலும் கண்காணிப்புக் கேமராக்களை (CCTV) நிறுவி, நீர்நிலைகளைப் பராமரிக்கும் உள்ளாட்சி அமைப்புகளைச் சட்டப்பூர்வமாகப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். கடமையைச் சரிவரச் செய்யாத அதிகாரிகள் மீது உரிய சட்ட விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அலட்சியமாகச் செயல்படும் மக்கள் பிரதிநிதிகளைத் தேர்தலில் போட்டியிடத் தகுதியற்றவர்களாக்குவது தொடர்பாக, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் (Representation of the People Act) பொருந்தக்கூடிய விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க

வேண்டும்.

- மாவட்ட நிர்வாகம், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் குடிமைச் சமூகக் குழுக்கள் இணைந்து கூட்டுக் கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும். அமாவாசை, ஆடிப்பெருக்கு போன்ற முக்கிய நாட்களில் ஆற்றங்கரைகளைக் கண்காணிக்க வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களை விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.
- அனைத்து நீர்நிலைகளின் கரைகளிலும் எச்சரிக்கைப் பலகைகளை நிறுவ வேண்டும். அவற்றில், "தனிநபர்களின் அலட்சியத்தால் தமிழ்நாட்டில் 18,000 நீர்நிலைகள் இழக்கப்பட்டுள்ளன" என்ற வாசகம் இடம்பெற வேண்டும்.
- ஒவ்வொரு 2 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீர்நிலைகளை முழுமையாகத் தூர்வாரி, தூய்மைப்படுத்தும் சமூக மற்றும் ஆன்மிக மரபை உருவாக்க வேண்டும். கோயில்களில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாபிஷேகத்தைப் போன்றே, நீர்நிலைகளின் நீர்த்தேக்கத் திறனைப் பராமரிப்பதற்கும் அவற்றைத் தொடர்ந்து தூய்மைப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- அணுமின் நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்கு வழங்கப்படும் அதே அளவிலான முன்னுரிமை, பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவத்தை நீர்நிலைகளுக்கும் வழங்க வேண்டும். தற்போதைய அலட்சியமான நடைமுறைகள் தொடர்ந்தால், எதிர்காலத் தலைமுறையினர் உயிர்வாழ்வதற்குத் தேவையான சுத்தமான தண்ணீரைக்கூடப் பெற முடியாத நிலை ஏற்படலாம் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

நீர்நிலைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனின் சமூகப் பொறுப்புமாகும். நீரைக் காப்போம்; எதிர்காலத் தலைமுறையின் வாழ்வைக் காப்போம்!

9. வேலைவாய்ப்புத் திட்டங்களின் அவசியம்

(i) வேலையின்மைச் சவால்களும் இளைஞர்களின் சமூகப் பொருளாதாரப் பாதிப்புகளும்

- உலகிலேயே மிகப்பெரிய இளைஞர் மக்கள்தொகையைக் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இளைஞர்களே நாட்டின் மிகப்பெரிய பலமாக உள்ளனர். இருப்பினும், பள்ளிக் கல்வி பயின்றவர்கள் முதல்

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் வரை படித்த இளைஞர்கள் கடுமையான வேலையின்மையை எதிர்கொள்கின்றனர். தங்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளைப் பெற முடியாமல் தவிக்கின்றனர்.

- பல இளைஞர்கள் பல ஆண்டுகளாகப் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகின்றனர். ஆனால், அரசு அல்லது தனியார் துறைகளில் வேலை கிடைக்காதபோது அவர்கள் விரக்தியடைகின்றனர்.
- வேலை என்பது வெறும் வருமானத்திற்கான வழிமுறை மட்டுமல்ல. அது தன்னம்பிக்கை, சமூக அங்கீகாரம், குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வாய்ப்பு மற்றும் எதிர்கால நம்பிக்கை ஆகியவற்றையும் வழங்குகிறது. நீண்டகால வேலையின்மை கடுமையான மன அழுத்தத்தையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துகிறது.
- வேலையில்லாத இளைஞர்கள் வேறு வழியின்றி குறு அல்லது சிறு தொழில்களைத் தொடங்க முயற்சிக்கும்போது, முதலீட்டுக்கான மூலதனப் பற்றாக்குறை மற்றும் வங்கிக் கடன் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள் போதுமான அளவில் இல்லாமை போன்ற காரணங்களால் அவர்களின் முயற்சிகள் முடங்குகின்றன.
- இன்றைய சமூகத்தில் திருமணத்திற்குப் பொருளாதார நிலைத்தன்மை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நிலையான வருமானம் இல்லாததால் பல இளைஞர்களின் திருமணம் தாமதமாகிறது. குறைந்த ஊதியம் பெறும் தனியார் துறை ஊழியர்கள் மற்றும் வேலை தேடுபவர்களைக் காட்டிலும் அரசு ஊழியர்கள் அல்லது அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு பல குடும்பங்கள் முன்னுரிமை அளிக்கின்றன.

(ii) மாவட்ட அளவிலான வளர்ச்சியும் கிராமப்புறத் தொழில்மயமாக்கலும்

- இளைஞர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களிலேயே வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு ஏதுவாக, மத்திய மற்றும் மாநில அரசுகள் அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டும். குறைந்த வாடகையில் தொழில் தொடங்குவதற்கான இடவசதியுடன் மின்சாரம், குடிநீர் மற்றும் இணைய வசதிகளையும் வழங்க வேண்டும். இதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை (MSMEs) ஊக்குவிக்க முடியும்.
- கிராமப்புறத் தொழில்மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்காக வேளாண் உணவுப் பதப்படுத்தும் ஆலைகள், குளிர்பதனக்

கிடங்குகள், பால் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் மையங்கள், மீன்வள மையங்கள், காய்கறி மற்றும் பழப் பதப்படுத்தும் மையங்கள், கைவினைப் பொருள் உற்பத்தி மையங்கள் ஆகியவற்றைக் கிராமங்களிலேயே அமைக்க வேண்டும்.

- வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொறுப்பை ஓர் அமைச்சகத்திடம் மட்டும் ஒப்படைக்க முடியாது. கல்வி, தொழில்துறை, நிதி, தொழிலாளர் நலன், தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு மற்றும் வேளாண்மை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

(iii) வேலைவாய்ப்புத் தரநிலைகள், பெண்கள் முன்னேற்றம் மற்றும் தொழில்முனைவோர் வளர்ச்சி

- வேலைவாய்ப்புகள் நியாயமான ஊதியம், பாதுகாப்பான பணிச்சூழல், சமூகப் பாதுகாப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.
- பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப சிறப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும். மகளிர் சுயஉதவிக் குழுக்கள் (SHGs) வாயிலாக நிதியுதவி, இலவசப் பயிற்சி, சந்தை வாய்ப்புகளுடன் இணைத்தல் மற்றும் மின்னணு வணிகத் தளங்களுக்கான அணுகல் ஆகியவற்றை வழங்க வேண்டும். இதன் மூலம் குடும்ப வருமானத்தையும் நாட்டின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க முடியும்.
- அரசு மற்றும் தனியார் துறைகளில் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்குவது நடைமுறையில் சாத்தியமற்றது. எனவே, வேலை தேடுபவர்களைத் தொழில்முனைவோராக மாற்ற வேண்டும். இதற்காக வட்டியில்லாக் கடன்கள், புதிய தொழில் தொடங்குவதற்கான மானியங்கள், தொழில்நுட்ப வழிகாட்டுதல், சந்தைப்படுத்தல் ஆதரவு மற்றும் நிர்வாகப் பயிற்சி ஆகியவற்றை வழங்க வேண்டும்.

(iv) ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களின் தொழில்முனைவோர் நடவடிக்கைகள் இளைஞர்களுக்கு ஏற்படுத்தும் தாக்கம்

- மத்திய மற்றும் மாநில அரசு ஊழியர்கள் பொதுவாக 30 முதல் 35 ஆண்டுகள் வரை பணியாற்றுகின்றனர். இக்காலத்தில் அவர்கள் நிலையான மாத ஊதியம், மருத்துவ வசதிகள், இதர சலுகைகள் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றைப் பெறுகின்றனர்.
- ஓய்வுபெற்ற பின்னர், முன்னாள் அரசு ஊழியர்களில் பலர் தங்களுக்குக்

கிடைக்கும் ஓய்வூதியப் பலன்கள் மற்றும் ஓய்வுபெறும்போது மொத்தமாகப் பெறும் தொகையை மூலதனமாகப் பயன்படுத்தி நிதி சார்ந்த முயற்சிகளிலும் சிறு வணிகங்களிலும் ஈடுபடுகின்றனர்.

- ஏற்கெனவே பொருளாதார வலிமையைக் கொண்டுள்ள இவர்கள் வணிகச் சந்தைகளில் நுழையும்போது, அதே துறைகளில் புதிதாகத் தொழில் தொடங்க முயற்சிக்கும் இளம் தொழில்முனைவோருக்குக் கடுமையான மற்றும் சமமற்ற போட்டி ஏற்படலாம்.
- எனவே, ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் புதிய வணிக நிறுவனங்களைத் தொடங்குவதற்குக் குறிப்பிட்ட கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பாகக் கொள்கை அளவிலான விவாதங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.